**FIRST INFORMATION REPORT**

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8093691

1. District / மாவட்டம் : நாகப்பட்டினம் PS / காவல்நிலையம் : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு நாகப்பட்டினம் Year / ஆண்டு : 2020 FIR No. / மு.த.அ. எண் : 04/2020 Date / நாள் : 11.11.2020

2. (i) Act சட்டம்: Cr.P.C and Sections பிரிவுகள்: 102 Cr.P.C and U/s. 7, 7A and 12 of PC Act 1988 as amended by PC(Amendment) Act 2018

   (ii) Act சட்டம்: P.C.(Amendment) Act 2018 Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 10.11.2020 Date from : நாள் முதல் Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.00 hrs Time to : நேரம் வரை 22.00 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.11.2020 Time : நேரம் 02.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : ✓

   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம் - Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:

   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 20 K.m மேற்கு கீழ்வேளூர்

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tv.K.ராஜேந்திரன்

   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கிருஷ்ணமூர்த்தி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 55/2020 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் மாவட்ட கண்காணிப்பு ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம் தஞ்சாவூர் (தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள்)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① திருமதி. K. கஸ்தூரி, வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), கீழ்வேளூர் ② திருமதி. P. ரேவதி, உதவி இயக்குநர், (ஊராட்சி நிதி தணிக்கை) நாகப்பட்டினம் ③ திரு. S. கார்த்திகேயன், ஆய்வாளர் (ஊராட்சி நிதி தணிக்கை) நாகப்பட்டினம் ④ திரு. இ. ரவீந்திரன், உதவி ஆய்வாளர் (ஊராட்சி நிதி தணிக்கை) நாகப்பட்டினம் மற்றும் ⑤ ஜெகநாதபுரம் அலுவலக உதவியாளர் திரு. V. ராஜசேகரன்

8. Reasons for delay in reporting by the complainant / Informant

   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   - தாமதமில்லை -

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

– இல்லை –

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து அனுப்பப்படுகிறது</u> இன்று 11.11.2020-ம் தேதி 02.00 மணிக்கு நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்கள் அளித்த புகார் அறிக்கையின்மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு அனுப்புநர், திரு.K.கஜேந்திரன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம். அய்யா, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான், இரகசிய தகவலின்படி நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் சேர்ந்து 10.11.2020-ம் தேதி மாலை 17.00 மணி முதல் 22.00 மணி வரை கீழ்வேளூர் வட்டார வளச்சி அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் சோதனையின்போது வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திருமதி. K.கஸ்தூரி அவர்கள் தி சென்னை சில்க்ஸ் என்று எழுதப்பட்ட பாலிதீன் மஞ்சள் கவரில் உள்ளாட்சி நிதி தணிக்கை குழுவினர் BDO அலுவலகத்தை தணிக்கை செய்தவர்களில் 1)திருமதி.P.ரேவதி, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, நாகப்பட்டினம் அவர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக காக்கி நிற கவரின் ஓரத்தில் AD என்று நீல நிற இங்க்-ஆல் எழுதபட்டு கவரின் உள்ளே மடிக்கப்பட்ட வெள்ளை நிற துண்டு காகிதத்தில் சேகர் RC என்று நீல நிற இங்க்-ஆல்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையிட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

11/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையிட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

11.11.2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

11.11.2020

Name: பெயர் G.RAMESH KUMAR
Rank: நிலை ......................No. எண் .........
INSPECTOR OF POLICE
Vigilance and Anti-Corruption, Nagapattinam.

**நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.04/2020 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி** :-

கட்டம்போட்டு எழுதப்பட்டும், 10,000/- என குறிப்பிட்டும் இருந்த காகிதத்தில் 500 x 20 = மொத்தம் ரூ 10,000/- பணம் இருந்தது கைப்பற்றப்பட்டது. 2)திரு.B.காளிதாஸ், ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கை, நாகப்பட்டினம் அவர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக காக்கி நிற கவரின் ஒட்டும் மேல் பகுதியில் INS என்று நீல நிற இங்க்-ஆல் எழுதபட்டு கவரின் உள்ளே மடிக்கப்பட்ட வெள்ளை நிற துண்டு காகிதத்தின் ஒரு பக்கத்தில் அனுப்புதல் திரு.பூ.காளிதாசன் என ஆரம்பிக்கப்பட்ட கடிதம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதன் கீழ் 10,000/- என நிற இங்க்-ஆல் எழுதப்பட்டும், காகிதத்தின் மறுப்பக்கம் 1262/20/அ6/ நாள்- 10-2020 என்று தொடங்கி எழுதப்பட்ட காகிதத்தில் 500 x 20 = மொத்தம் ரூபாய் 10,000/- பணம் இருந்தது கைப்பற்றப்பட்டது. 3)திரு.V.வேந்தன், உதவி ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கை, நாகப்பட்டினம் அவர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக காக்கி நிற கவரின் ஒட்டும் மேல் பகுதியில் Asst என்று நீல நிற இங்க்-ஆல் எழுதபட்டு கவரின் உள்ளே மடிக்கப்பட்ட வெள்ளை நிற துண்டு காகிதத்தின் ஒரு பக்கத்தில் 5000/- என நீல நிற இங்கால் எழுதப்பட்ட காகிதத்தில் 500 x 10 = மொத்தம் ரூபாய் 5,000/- பணம் இருந்தது கைப்பற்றப்பட்டது. மேலும் உதவி இயக்குநர் திருமதி.P.ரேவதி, அவர்களது கைப்பையிலிருந்து தொழில்வரி - கனரக வாகனங்கள் உரிமையாளர் களிடம் தொழில் வரி விதிக்கப்படவில்லை என தொடங்கி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டும் மறு பக்கம் அலுவலக குறிப்பு என தொடங்கி கையால் எழுதப்பட்டும் இருந்த வெள்ளை நிற பேப்பரில் 500 x 10 = மொத்தம் ரூ 5,000/- இருந்தது கைப்பற்றப்பட்டது. மேற்படி உள்ளாட்சி நிதி தணிக்கை, ஆய்வாளர் திரு.B.காளிதாஸ், அவர்களின் பர்சிலிருந்து 500 x 12 = மொத்தம் ரூ 6,000/- இருந்தது கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் பணிசெய்து ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.V.ரெங்கராஜன் என்பவரின் பர்சிலிருந்து பணம் 500 x 5 = 2,500/-, 100 x 2 = 2,00/- மொத்தம் ரூபாய் 2,700/-க்கு அவர் சரியான கணக்கு சொல்லாததால் மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.S.ராகவேந்திரா த/பெ சத்தியராஜா, தனியார் ஒப்பந்தக்காரரின் மேற்பார்வையாளரின் பர்சிலிருந்து பணம் 500 x 10 = 5,000, 200 x 10 = 2,000/- மொத்தம் ரூபாய் 7,000/- இருந்தது பற்றி விசாரிக்க அவர் M Book correction செய்ய ஓவர்சிரியர் மற்றும் RC சேகரை பார்க்க வந்ததாகவும், அவர் வைத்திருந்த பணத்திற்கு சரியான விளக்கம் கூறாததால் மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.G.அன்புச்செல்வன் த/பெ கணேசன், இருக்கை பஞ்சாயத்து ஊராட்சி செயலர் பர்சிலிருந்து பணம் 2000 x 1 = 2,000, 500 x 16 = 8,000/-, 100 x 3 = 300 மொத்தம் ரூபாய் 10,300/- இருந்தது பற்றி விசாரிக்க அவர் Zonal Deputy BDO திரு.பக்கிரிசாமி என்பவர் வரச்சொன்னதால் வந்ததாகவும், தூய்மை பணியாளர்களுக்குரிய படிவம் 19 விபரங்கள் கொடுப்பதற்காக வந்ததாகவும், மேற்படி பணத்திற்குரிய காரணம் சரிவர கூறாததால் மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் 2019-2020-ம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கையில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய

உள்ளாட்சி நிதி தணிக்கை குழுவினருக்கு கையூட்டாக கொடுப்பதற்கு கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) திருமதி.K.கஸ்தூரி அவர்கள் வைத்திருந்த கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் மொத்தம் ரூபாய் 25,000/- பணத்தையும், மேலும் ரூபாய் 31,000/- சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது உள்ளாட்சி நிதி தணிக்கை குழு, வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக வாங்கி வைத்திருந்த பணமாகவும், கையூட்டாக பெற்ற பணமாகவும், கையூட்டு கொடுக்க கொண்டுவந்த பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இத்திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட மேற்படி மொத்தப் பணம் ரூபாய் **56,000/-** மற்றும் சென்னை சில்க்ஸ் கவர்-1, காக்கி நிற கவர்-3(AP, Ins, Asst என்று எழுதப்பட்டுள்ளது), வெள்ளை துண்டு காகிதம்-3, கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி(வ.ஊ) அலுவலக 2020 ஆம் ஆண்டு வருகை பதிவேடு, கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி(கி.ஊ) அலுவலக 2020 ஆம் ஆண்டு வருகை பதிவேடு, 2020 ஆம் ஆண்டு களப்பணியாளர்கள் வருகை பதிவேடு, முகாம் பதிவேடு, 2019-2020 ஆம் ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட அனைத்து நிதியாண்டு கணக்குகளுக்குண்டான கோப்பு மற்றும் 1)திருமதி.K.கஸ்தூரி, வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), கீழ்வேளூர், 2)திருமதி.P.ரேவதி, உதவி இயக்குநர் (உள்ளாட்சி நிதி தணிக்கை), நாகப்பட்டினம் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து ஆஜர் படுத்துகிறேன். எனவே மேற்படி 1)திருமதி.K.கஸ்தூரி, வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), கீழ்வேளூர், 2)திருமதி.P.ரேவதி, உதவி இயக்குநர் (உள்ளாட்சி நிதி தணிக்கை), நாகப்பட்டினம், 3)திரு.B.காளிதாஸ், ஆய்வாளர்(உள்ளாட்சி நிதி தணிக்கை), 4)திரு.வை.வேந்தன், உதவி ஆய்வாளர் (உள்ளாட்சி நிதி தணிக்கை), 5)ஓய்வுபெற்ற அலுவலக உதவியாளர் திரு.V.ரெங்கராஜன் ஆகிய நபர்களின்மீது உரிய சட்டப்படியான நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (ஒப்பம்) K.கஜேந்திரன் 11.11.2020. (K.கஜேந்திரன்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் இன்று 10.11.2020 ஆம் தேதி மாலை சுமார் 17.00 மணிமுதல் நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தாலுக்கா கீழ்வேளூர் KK நித்திகா காம்ப்ளக்ஸ் எதிர்புறம் கிழக்கு பார்த்த வாசல் உள்ள கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தை திரு.K.கஜேந்திரன், த/பெ.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் அவர்கள் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.G.ரமேஷ் குமார் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலர்கள் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் ஆய்வின் செயல்முறை நடவடிக்கைகள் குறித்து மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் திரு.K.கஜேந்திரன் அவர்களால் தயார் செய்யப்படும் திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் மகஜர் விபரம் பின்வருமாறு. நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் தாலுக்கா கீழ்வேளூர் KK நித்திகா காம்ப்ளக்ஸ் எதிர்புறமுள்ள கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் 2019-2020 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை நடைபெறும்பொழுது தணிக்கைக் குழுவினருக்கு வட்டார வளர்ச்சி அலுவலரால் கையூட்டு வழங்கப்படுவதாக நாகப்பட்டினம்

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியதகவலினை இன்று 10.11.2020 மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், தஞ்சாவூர் அவர்களுக்கு 12.00 மணிக்கு தகவல் தெரிவித்தன் பேரில், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள் தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டு, நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 15.00 மணிக்கு வந்தும், நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து 10.11.2020 ஆம் தேதி 16.00 மணிக்கு இரண்டு அரசு வாகனத்தில் புறப்பட்டு கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு 17.00 மணிக்கு வந்து, மேற்படி நாகப்பட்டினம் விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விபரம் பின்வருமாறு. மேற்படி நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகமானது நாகப்பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் தாலுக்கா கீழ்வேளூர் to கச்சனம் சாலையில் KK நித்திகா காம்ப்ளக்ஸ் எதிர்புறம் கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலக கட்டிடம் கிழக்கு பார்த்த வாயிலுடன்கூடிய இரண்டு தளங்களுடன் அமைந்துள்ளது. மேற்படி தரைதளத்தில் நுழைவு வாயிலுக்கு இடதுபுறம் முதல் தளத்திற்கு செல்லும் மாடிபடிகளும், அதனை அடுத்து தெற்கு பக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) அறையும், அதனை அடுத்து மேற்கு பக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) அலுவலர்கள் அறையும், அந்த அறையில் அலுவலக தணிக்கை அறையும் உள்ளது. அதனை அடுத்து கழிவறையும், அலுவலகப்பிரிவுக்கு எதிர்புறம் இருப்பு அறை, கணினி பிரிவு, விரிவாக்க அலுவலர் அறையும் உள்ளது. அலுவலகத்தின் தெற்கு பக்கம் ஒன்றிய பெருந்தலைவர் அறை மற்றும், ஒன்றிய அவைக்கூடம் மற்றும் பதிவறையும் உள்ளது. முதல் தளத்தில் தெற்கு பக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம பஞ்சாயத்து) அவர்களின் அறையும் அதனை அடுத்து அலுவலக திட்டப்பிரிவு அறையும், அதனை அடுத்து கழிவறையும், அதற்கு வடக்கு பக்கம் ஒன்றிய பணிமேற்பார்வையாளர் அறையும், உதவி பொறியாளர் அறையும், சாலை ஆய்வாளர் அறையும் மற்றும் அலுவலர்கள் அறைக்கு எதிர்புறம் கூட்ட அரங்கும் உள்ளது. கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு எதிர்புறம் கீழ்வேளூர் to கச்சனம் செல்லும் வடக்கு தெற்காக உள்ள சாலையும், சாலைக்கு அடுத்து BDO அலுவலகத்திற்கு எதிர்புறம், KK நித்திகா காம்ப்ளக்ஸில் அமுதசுரபி ஜூவல்லரி மற்றும் KK எண்டர்பிரைசஸ் & எலக்ட்ரானிக்ஸ் கடைகளும், அதற்கு வடக்கு பக்கம் ARS Super Market-ம் உள்ளது. BDO அலுவலகத்திற்கு வடக்கு பக்கம் பழைய கட்டிடமும் அதனை அடுத்து பேரூராட்சி அலுவலகத்திற்கு செல்லும் சாலையும் அதனை அடுத்து வடக்கு பக்கம் மீனாட்சி மெடிக்கலும் மற்றும் பல கடைகளும் தொடர்ந்தார்போல் உள்ளது. BDO அலுவலகத்திற்கு தெற்கு பக்கம் ராமு மற்றும் ரவி என்பவர்களின் வீடு மற்றும் கடைகளும் அதனை அடுத்து தெற்குவீதியும் உள்ளது. கீழ்வேளூர் BDO(BP) அறையில் திருமதி.K.கஸ்தூரி, வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம பஞ்சாயத்து) அவர்களும், திரு.B.காளிதாஸ், ஆய்வாளர்(உள்ளாட்சி நிதி தணிக்கை), உதவி இயக்குநர் அலுவலகம், நாகப்பட்டினம் அவர்களும், திரு.ரெங்கராஜன், Retired Office Assistant அவர்களும் இருந்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) அலுவலர்கள் அறைக்குள் இருந்த அலுவலக தணிக்கை அறையில் திருமதி.P.ரேவதி, உதவிய இயக்குநர்(உள்ளாட்சி

நிதி தணிக்கை) உதவி இயக்குநர் அலுவலகம், நாகப்பட்டினம் மற்றும் திரு.வை.வேந்தன், உதவி ஆய்வாளர்(உள்ளாட்சி நிதி தணிக்கை) உதவி இயக்குநர் அலுவலகம், நாகப்பட்டினம் ஆகியோர் இருந்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி) அலுவலர்கள் அறைக்குள் திரு.D.சேகர், பதிவுறு எழுத்தர், திரு.S.ராகவேந்திரா, த/பெ.சத்தியராஜா, தனியார் ஒப்பந்த மேற்பார்வையாளர், கோவில்பத்து மற்றும் அலுவலர்கள் இருந்தனர். வட்டார வளர்ச்சி அலுவலர்(கிராம ஊராட்சி) அலுவலர்கள் அறையில் திரு.N.பக்கிரிசாமி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், திரு.N.அன்புச்செல்வன், ஊராட்சி செயலர், இருக்கை ஊராட்சி மற்றும் அலுவலர்கள் இருந்தனர். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினர் அங்கிருந்தவர்கள் அனைவரிடமும் தங்களையும், தங்களுடன் வந்தவர்களையும் அறிமுகம் செய்தபோது, மேற்படி இடத்தில் நின்று கொண்டிருந்த சில நபர்கள் அவரவர்கள் நின்றுகொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் அங்கிருந்தவர்களை நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையில் கீழ்கண்ட நபர்கள் வைத்திருந்து ஆஜர் செய்த தொகைகள் சரியான முகாந்திரம் கூறிய கீழ்கண்ட தொகை அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர், பதவிமற்றும் முகவரி | திரும்ப ஒப்படைக்கப்பட்ட ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.ஹரிகிருஷ்ணன், இளநிலை உதவியாளர், அ4 பிரிவு | 5,100 |
| 2 | திரு.ஹாஜா அலாவுதீன், கணினி ஆப்ரேட்டர் | 1,220 |
| 3 | திருமதி.S.இளக்கியா, கணினி ஆப்ரேட்டர் | 410 |
| 4 | திருமதி.L.ராணி, உதவியாளர் | 310 |
| 5 | செல்வி.P.தங்கமணி, இளநிலை உதவியாளர் | 270 |
| 6 | செல்வி.G.மகாலெட்சுமி, தட்டச்சர் | 2,350 |
| 7 | திரு.S.ராஜகுமார், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) | 300 |
| 8 | திரு.பாரதி, பணிமேற்பார்வையாளர் | 1,140 |
| 9 | திரு.S.சந்திரசேகர், உதவியாளர் | 500 |
| 10 | திரு.ராஜ்குமார், பணிமேற்பார்வையாளர் | 630 |
| 11 | திரு.அருள்தாஸ், பணிமேற்பார்வையாளர் | 430 |
| 12 | திருமதி.செல்வமேரி, இளநிலை உதவியாளர் | 500 |
| 13 | திரு.வசந்த், கணினி ஆப்ரேட்டர் | 1,860 |
| 14 | திரு.வில்லியம்ஸ், கணினி ஆப்ரேட்டர் | 2,050 |
| 15 | திருமதி.எழிலரசி, உதவியாளர் | 5,100 |
| 16 | செல்வி.சரண்யா, கணினி ஆப்ரேட்டர் | 4,010 |
| 17 | திரு.செல்வகுமார், உதவியாளர் | 140 |
| 18 | திரு.வை.வேந்தன், உதவி ஆய்வாளர் (உள்ளாட்சி நிதி தணிக்கை) | 920 |
| 19 | திரு.B.காளிதாஸ், ஆய்வாளர்(உள்ளாட்சி நிதி தணிக்கை) | 620 |

| | | |
|---|---|---|
| 20 | திருமதி.P.ரேவதி, உதவி இயக்குநர் (உள்ளாட்சி நிதி தணிக்கை) | 310 |
| 21 | திரு.சுப்பிரமணியன், ஓட்டுநர் | 1,010 |
| 22 | திருமதி.K.கஸ்தூரி, வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) | 610 |
| 23 | திரு.N.அன்புச்செல்வன், ஊராட்சி செயலர் | 171 |
| | **மொத்தம்** | **29,961** |

திடீர் சோதனையின்போது வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திருமதி. K.கஸ்தூரி என்பவரது இருக்கைக்கு அருகில் அவர் வைத்திருந்த பாலிதீன் கவரை எடுத்து ஆஜர் செய்தார். பேற்படி BDO திருமதி. K.கஸ்தூரி அவர்களுக்கு சொந்தமான "தி சென்னை சில்க்ஸ்" என்று எழுதப்பட்ட பாலிதீன் மஞ்சள் நிற கவரில் உள்ளாட்சி நிதி தணிக்கைக் குழுவினர் மேற்படி BDO அலுவலகத்தில் ஆடிட் செய்பவர்களுக்கு கொடுப்பதற்காக 1)திருமதி.P.ரேவதி, உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, நாகப்பட்டினம் அவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக காக்கி நிற கவரின் ஓரத்தில் "AD" என்று நீல நிற இங்க்-ஆல் எழுதப்பட்டு கவரின் உள்ளே மடிக்கப்பட்ட வெள்ளை நிற துண்டு காகிதத்தில் "சேகர் RC" என்று நீல நிற இங்க்-ஆல் கட்டம்போட்டு எழுதப்பட்டும், 10,000/- என குறிப்பிட்டும் இருந்த காகிதத்தில் 500 x 20 = மொத்தம் ரூபாய்.10,000/- பணம் இருந்தது. மேலும் 2) திரு.B.காளிதாஸ், ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கை, நாகப்பட்டினம் அவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக காக்கி நிற கவரின் ஒட்டும் மேல் பகுதியில் "INS" என்று நீல இங்க்-ஆல் எழுதப்பட்டு கவரின் உள்ளே மடிக்கப்பட்ட வெள்ளை நிற துண்டு காகிதத்தின் ஒரு பக்கத்தில் அனுப்புதல் "திரு.பூ.காளிதாசன்" என ஆரம்பிக்கப்பட்ட கடிதம் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதன் கீழ் 10,000/- என நீல நிற இங்க்-ஆல் எழுதப்பட்டும், காகிதத்தின் மறுப்பக்கம் 1262/20/அ6/ நாள்- 10-2020 என்று தொடங்கி எழுதப்பட்ட காகிதத்தில் 500 x 20 = மொத்தம் ரூபாய் 10,000/- பணம் இருந்தது கைப்பற்றப்பட்டது. மேலும் 3)திரு.V.வேந்தன், உதவி ஆய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கை, நாகப்பட்டினம் அவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக காக்கி நிற கவரின் ஒட்டும் மேல் பகுதியில் "Asst" என்று நீல நிற இங்க்-ஆல் எழுதபட்டு கவரின் உள்ளே மடிக்கப்பட்ட வெள்ளை நிற துண்டு காகிதத்தின் ஒரு பக்கத்தில் 5000/- என நீல நிற இங்க்-ஆல் எழுதப்பட்ட காகிதத்தில் 500 x 10 = மொத்தம் ரூபாய் 5,000/- பணம் இருந்தது கைப்பற்றப்பட்டது. மேற்படி உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை, திருமதி.P.ரேவதி, அவர்களது கைப்பையிலிருந்து "தொழில்வரி - கனரக வாகனங்கள் உரிமையாளர்களிடம் தொழில் வரி விதிக்கப்படவில்லை" என தொடங்கி கணினியில் தட்டச்சு செய்யப்பட்டும் மறு பக்கம் "அலுவலக குறிப்பு" என தொடங்கி கையால் எழுதப்பட்டும் இருந்த வெள்ளை நிற பேப்பரில் 500 x 10 = மொத்தம் ரூ 5,000/- இருந்தது கைப்பற்றப்பட்டது. மேற்படி உள்ளாட்சி நிதி தணிக்கை, ஆய்வாளர் திரு.B.காளிதாஸ், அவர்களின் பர்சிலிருந்து 500 x 12 = மொத்தம் ரூ 6,000/- இருந்தது கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் பணிசெய்து ஓய்வு பெற்ற அலுவலக உதவியாளர் திரு.V.ரெங்கராஜன் என்பவரின்

பர்சிலிருந்து பணம் 500 x 5 = 2,500/-, 100 x 2 = 2,00/- மொத்தம் ரூபாய் 2,700/-க்கு அவர் சரியான கணக்கு சொல்லாததால் மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.S.ராகவேந்திரா த/பெ சத்தியராஜா, தனியார் ஒப்பந்தக்காரரின் மேற்பார்வையாளரின் பர்சிலிருந்து பணம் 500 x 10 = 5,000, 200 x 10 = 2,000/- மொத்தம் ரூபாய் 7,000/- இருந்தது பற்றி விசாரிக்க அவர் M Book correction செய்ய ஓவர்சிரியர் மற்றும் RC சேகரை பார்க்க வந்ததாகவும், அவர் வைத்திருந்த பணத்திற்கு சரியான விளக்கம் கூறாததால் மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு. G.அன்புச்செல்வன் த/பெ கணேசன், இருக்கை பஞ்சாயத்து ஊராட்சி செயலர் பர்சிலிருந்து பணம் 2000 x 1 = 2,000, 500 x 16 = 8,000/-, 100 x 3 = 300 மொத்தம் ரூபாய் 10,300/- இருந்தது பற்றி விசாரிக்க அவர் Zonal Deputy BDO திரு.பக்கிரிசாமி என்பவர் வரச்சொன்னதால் வந்ததாகவும், தூய்மை பணியாளர்களுக்குரிய படிவம் 19 விபரங்கள் கொடுப்பதற்காக வந்ததாகவும் கூறியவர், மேற்படி பணத்திற்குரிய காரணம் சரிவர கூறாததால் மேற்படி பணம் மகஜரில் கைப்பற்றப்பட்டது. கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் 2019-2020-ம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கையில் உள்ள குறைபாடுகளை சரி செய்ய வேண்டி உள்ளாட்சி நிதி தணிக்கை குழுவினருக்கு கையூட்டாக கொடுப்பதற்கு கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ) திருமதி.K.கஸ்தூரி அவர்கள் வைத்திருந்த கையூட்டு பணம் என்பதன் அடிப்படையில் மொத்தம் ரூபாய் 25,000/- பணத்தையும், மேலும் உள்ளாட்சி நிதி தணிக்கை மற்றும் அலுவலர்கள்/தனிநபர்கள் வைத்திருந்த ரூபாய் 31,000/- சரியான முகாந்திரம் கூற இயலாத சந்தேகத்துடன் கூடிய கையூட்டு தொகையானது உள்ளாட்சி நிதி தணிக்கை குழு, வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அலுவலக அலுவலர்களுக்கு கையூட்டு கொடுப்பதற்காக வைத்திருந்த பணமாகவும், கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் கையூட்டு கொடுப்பதற்காக கொண்டு வந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்கண்ட விபரப்படியான மொத்தப்பணம் ரூபாய். 56,000/- மற்றும் சென்னை சில்க்ஸ் பாலிதீன் கவர்-1, காக்கி நிற கவர்-3(AP, Ins, Asst என்று எழுதப்பட்டுள்ளது), வெள்ளை துண்டு காகிதம்-3, கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி(வ.ஊ) அலுவலக 2020 ஆம் ஆண்டு வருகை பதிவேடு, கீழ்வேளூர் வட்டார வளர்ச்சி(கி.ஊ) அலுவலக 2020 ஆம் ஆண்டு வருகை பதிவேடு, 2020 ஆம் ஆண்டு களப்பணியாளர்கள் வருகை பதிவேடு, முகாம் பதிவேடு, 2019-2020 ஆம் ஆண்டு தணிக்கை செய்யப்பட்ட அனைத்து நிதியாண்டு கணக்குகளுக்குண்டான கோப்பு ஆகிய ஆவணங்கள் திடீர் ஆய்வின் மேல்நடவடிக்கைக்காக நடவடிக்கை மற்றும் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது மாவட்ட துணை ஆய்வுகுழு அலுவலர் அவர்கள் 1)திருமதி.K.கஸ்தூரி, வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), கீழ்வேளூர் மற்றும் 2)திருமதி.P.ரேவதி, உதவி இயக்குநர் (உள்ளாட்சி நிதி தணிக்கை), நாகப்பட்டினம் ஆகியோரை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இன்று 10.11.2020 ஆம் தேதி இரவு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகளின் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடப்பட்டுள்ளது. <u>**பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**</u> இன்று 11.11.2020 ஆம் தேதி 02.00

மணிக்கு மேற்படி புகாரைப்பெற்று நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குற்ற எண்.04/2020, U/s. 102 Cr.P.C. and U/s. 7, 7-A and 12 of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

11.11.2020
(G.RAMESH KUMAR),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசல், வாதியின் அறிக்கை, திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் நடவடிக்கைகள் மற்றும் மகஜர், எதிரிகள் 1)திருமதி.K.கஸ்தூரி, வட்டார வளர்ச்சி அலுவலர்(வட்டார ஊராட்சி), கீழ்வேளூர் வட்டாரம் மற்றும் 2)திருமதி.P.ரேவதி, உதவி இயக்குநர் (உள்ளாட்சி நிதி தணிக்கை), நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்பித்தும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

11.11.2020
(G.RAMESH KUMAR),
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்